(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 03.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, மே 05, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— ஆலோசனைக்குழுக்களும் (சட்டவாக்க) நிலையியற் குழுக்களும்,—

(அ) கீழ்க்கண்டவாறு நாற்பத்தைந்து (45) ஆலோசனைக்குழுக்கள் நியமிக்கப்படுமாக:-

1. பௌத்த சாசன, மத அலுவல்கள் ஆலோசனைக்குழு
2. அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு
3. நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக்குழு
4. அனர்த்த முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக் குழு
5. சுகாதாரம் பற்றிய ஆலோசனைக்குழு
6. பெற்றோலியக் கைத்தொழில்கள் பற்றிய ஆலோசனைக்குழு
7. நீர்வழங்கல், வடிகாலமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு
8. மரபார்ந்த கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு
9. உள்ளூராட்சி, மாகாண சபைகள் பற்றிய ஆலோசனைக்குழு
10. புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு
11. கைத்தொழில், வாணிபம் பற்றிய ஆலோசனைக்குழு
12. நிர்மான, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் பற்றிய ஆலோசனைக்குழு
13. மின்வலு, எரிசக்தி பற்றிய ஆலோசனைக்குழு
14. பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு

15. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு
16. வெளிநாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
17. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
18. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
19. மீள்குடியேற்றம் பற்றிய ஆலோசனைக்குழு
20. தபால், தொலைத் தொடர்புகள் பற்றிய ஆலோசனைக்குழு
21. தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
22. சுற்றாடல் பற்றிய ஆலோசனைக்குழு
23. சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
24. நீதி பற்றிய ஆலோசனைக்குழு
25. தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாடு பற்றிய ஆலோசனைக்குழு
26. கல்வி பற்றிய ஆலோசனைக்குழு
27. பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய ஆலோசனைக்குழு
28. கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு
29. சுதேச மருத்துவத்துறை பற்றிய ஆலோசனைக்குழு
30. தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு பற்றிய ஆலோசனைக்குழு
31. காணி, காணி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு
32. சமூக சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு
33. விளையாட்டுத்துறை பற்றிய ஆலோசனைக்குழு
34. கமத்தொழில் பற்றிய ஆலோசனைக்குழு
35. போக்குவரத்து பற்றிய ஆலோசனைக்குழு
36. இளைஞர் அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு
37. கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகம் பற்றிய ஆலோசனைக்குழு
38. தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக்குழு
39. நிதி, திட்டமிடல் பற்றிய ஆலோசனைக்குழு
40. மக்கள் தொடர்பாடல், தகவல் பற்றிய ஆலோசனைக்குழு
41. சனசமூக அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு பற்றிய ஆலோசனைக்குழு
42. பாதுகாப்பு பற்றிய ஆலோசனைக்குழு
43. துறைமுகங்கள், விமான சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு
44. நெடுஞ்சாலைகள் பற்றிய ஆலோசனைக்குழு
45. உயர் கல்வி பற்றிய ஆலோசனைக்குழு

109 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடும் பொருட்டு ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஐந்து (5) பேருக்குக் குறையாததும் இருபத்தைந்து (25) பேருக்கு விஞ்சாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் கூட்டநடப்பெண்ணாக மூன்று (3) உறுப்பினர் களைக் கொண்டிருக்குமாக.

(ஆ) முறையே “ஏ” நிலையியற்குழு மற்றும் “பீ” நிலையியற்குழு என்றழைக்கப்படும் இரண்டு சட்டவாக்க நிலையியற்குழுக்கள் நியமிக்கப்படுமாக.

ஒவ்வொரு குழுவும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு ஏதேனுமொரு குறித்த சட்டமூலமொன்று பரிசீலனைக்கு விடப்படுமிடத்து மேலதிகமாக பதினைந்து (15) உறுப்பினர்களுக்கும் விஞ்சாத எண்ணிக்கையினை ஒவ்வொரு குழுவுக்கும் நியமிப்பதற்கு சபாநாயகர் அதிகாரமுடையவராக இருப்பாராக.

ஒவ்வொரு குழுவும் கூட்ட நடப்பெண்ணாக நான்கு (4) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சபைக்குழு,— 122 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சபைக்குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் பத்து (10) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு,— 123 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் பத்து (10) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— 124 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர், பாராளுமன்றச் சபைமுதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் இருபத்திநான்கு (24) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அரசாங்க கணக்குகள் பற்றிய குழு,— 125 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

7.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பொது முயற்சிகள் பற்றிய குழு,— 126 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது முயற்சிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

8.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமைகள் பற்றிய குழு,— 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

9.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— 128 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது மனுக்கள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் இருபத்தொன்பது (29) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

10.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— உயர் பதவிகள் பற்றிய குழு,— 128 (அ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் உயர் பதவிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் பத்தொன்பது (19) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (மே 04, 2010),— “1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 மே மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.